TAMIL MURASU

10 JULY 2022

PAGE 2

# புதுவை பல்கலை. துணைவேந்தருக்கு கூடுதல் பொறுப்பு

புதுச்சேரி, ஜூலை 10- புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கிற்கு கூடுதல் பொறுப்பாக காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி அளிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராமத்தில் உள்ள காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியிலிருந்து மாதேஸ்வரன் விலகினார். இதையடுத்து, பொறுப்பு துணைவேந்தராக ரங்கநாதன் நியமிக்கப்பட்டு பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் அவர் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, புதுவை பல்கலைக்கழக துணைவேந்தரான குர்மீத் சிங்கிற்கு கூடுதல் பொறுப்பாக காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மத்திய கல்வி அமைச்சகத்தின் சார்பு செயலர் விஜயலட்சுமி மகாதேவன் பிறப்பித்துள்ளார்.

புதுவை பல்கலைக்கழக துணைவேந்தராக குர்மீத் சிங் கடந்த 2017 நவம்பர் 29ம் தேதி முதல் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

THE NEW INDIAN EXPRESS

10 JULY 2022

PAGE 3.

# Gandhigram Rural Institute gets interim V-C

**EXPRESS NEWS SERVICE**
@ Puducherry

PROFESSOR Gurmeet Singh, vice-chancellor of Pondicherry University, has been appointed as the vice-chancellor of Gandhigram Rural Institute (GRI), a deemed university, on additional charge with immediate effect by the Ministry of Education.

Consequent to the resignation of Profesor S Madheswaran from the post of GRI vice-chancellor, Dr TT Ranganathan, the senior most professor of GRI, was given additional charge to perform the duties of V-C till the appointment of new V-C or any further orders, whichever is earlier.



Now the Ministry has appointed Singh for a period of six months or till the appointment of a regular V-C or until further orders.

Singh will take charge in the coming week, according to a release from the university .

Singh He has been serving as Pondicherry University V-C since November 29, 2017.

DINAKARAN

10 JULY 2022

PAGE 15

# புதுவை பல்கலைக்கழக துணைவேந்தருக்கு கூடுதல் பொறுப்பு

புதுச்சேரி, ஜூலை 10: புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கிற்கு கூடுதல் பொறுப்பாக காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராமத்தில் உள்ள காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியிலிருந்து மாதேஸ்வரன் விலகினர். இதையடுத்து, பொறுப்பு துணைவேந்தராக ரங்கநாதன் நியமிக்கப்பட்டு பணியாற்றி வந்தார். இந்நிலையில் அவர் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, புதுவை பல்கலைக்கழக துணைவேந்தரான குர்மீத் சிங்கிற்கு கூடுதல் பொறுப்பாக காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மத்திய கல்வி அமைச்சகத்தின் சார்பு செயலர் விஜயலட்சுமி மகாதேவன் பிறப்பித்துள்ளார்.

புதுவை பல்கலைக்கழக துணைவேந்தராக கடந்த 2017ம் ஆண்டு நவம்பர் 29ம் தேதி குர்மீத் சிங் பதவியேற்றுக் கொண்டார். அதன் பிறகு பல்கலைக்கழகத்தில் கல்வி ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். அவரது தலைமையில் புதுவை பல்கலைக்கழகம் சர்வதேச மற்றும் தேசிய தரவரிசை நிறுவனங்களால் வழங்கப்படும் தரவரிசையில் மேம்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.